நான் கருதுகிறேன். காரணம், மாண்புமிகு உறுப்பினர் சகோதரி செல்வி கே. பாலபாரதி அவர்கள் எங்களுக்கும் அதுபோன்று நிதியொதுக்கிச் செய்வீர்களா என்று ஒரு சந்தேகக் கண்ணோடு ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றி ஆய்வு செய்கின்ற நேரத்தில், 'திண்டுக்கல் நகரத்திற்கு 5 நாட்கள், 10 நாட்கள் இடைவெளியில் தண்ணீர் வருவதாக அறிகிறேன்; உடனடியாக அதை ஆய்வு செய்து அந்த நகரத்திற்கும், சுற்றுப்புறத்திற்கும் தண்ணீர் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்' என்று நேரடியாக எனக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாட்சிமை தங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், ஒரு முதலமைச்சர் என்ற நிலையில் இருந்தும், அதற்கும் மேலாக ஒரு தாயுள்ளத்தோடு, அனைத்து மக்களையும் பாதுகாக்கக்கூடிய ஒரு தாயாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையிலே சந்தேகத்தோடு வினா எழுப்பாமல், உரிமையோடு வினாவை எழுப்பி, உரிமையோடு அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு நீங்கள் முன்வர வேண்டும்; நாங்களும் அதைச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 338, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

338—

மாம்பழக் கூழ் தொழிற்சாலை

***20454—திரு. வி.பி. நாகைமாலி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதியில் அதிக அளவில் மாம்பழங்கள் கிடைப்பதால், இப்பகுதியில் ஒரு மாம்பழக் கூழ் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கீழ்வேளூர் தொகுதியிலுள்ள பிரதாபராமபுரம், காமேஸ்வரம், புதுப்பள்ளி, விழுந்தமாவடி, வேட்டைக்காரனிருப்பு, வடக்குப் பொய்கைநல்லூர், தெற்குப் பொய்கைநல்லூர் ஆகிய பகுதிகளில் மாம்பழக் கூழ் தொழிற்சாலை துவக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தொழிற்சாலை தொடங்குவதற்கு தொழில்முனைவோர்கள் முன் வருவார்களேயானால், அரசின் சார்பாக அவர்களுக்கு மானியங்கள் தந்து, மாம்பழக் கூழ் தொழிற்சாலை தொடங்குவதற்கு அரசு உறுதுணையாக இருக்கும் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான கீழ்வேளூர் தொகுதி கடற்கரையை உள்ளடக்கிய ஒரு தொகுதியாகும். அத்தொகுதியிலுள்ள கடலோரக் கிராமங்களான வடக்குப் பொய்கைநல்லூர், தெற்குப் பொய்கைநல்லூர், பிரதாபராமபுரம், காமேஸ்வரம், விழுந்தமாவடி, புதுப்பள்ளி, வேட்டைக்காரனிருப்பு ஆகிய பகுதிகளிலும், எனது தொகுதிக்குப் பக்கத்திலிருக்கிற வேதாரண்யம் தொகுதியிலுள்ள பல இடங்களிலும் அதிகமாக மாம்பழங்கள் விளைகின்றன. மாம்பழங்களைப் பயிரிடும் விவசாயிகள், அதனை விற்பதற்கு சந்தை இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்; அந்த விவசாயம் அவர்களுக்கு இலாபகரமாக அமையவில்லை. இதனைக் கவனத்திற்கொண்டு, வேட்டைக்காரனிருப்பு என்ற கிராமத்தில் ஒரு மாம்பழக் கூழ் தொழிற்சாலையை அமைத்துத் தந்தால், எனது தொகுதியிலுள்ள கிராமங்கள், என் தொகுதிக்குப் பக்கத்திலுள்ள வேதாரண்யத்திலிருக்கிற மாம்பழம் விளைவிக்கக்கூடிய கிராமங்கள் ஆகியவற்றுக்கு மிகுந்த பலனைத் தரும். அப்படியொரு மாம்பழக் கூழ் தொழிற்சாலையை நாம் அமைக்கும்பட்சத்தில், மற்ற கிராமங்களிலும் மாம்பழங்களை அதிகமாக விளைவிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதனைக் கவனத்திற்கொண்டு, எனது தொகுதியில்

மாம்பழக் கூழ் தொழிற்சாலையை அரசியம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக நான் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும், கீழ்வேளூர் தொகுதியில் சுமார் 500 ஹெக்டேர் நிலப்பரப்பில் மா பயிரிடப்படுகிறது. அந்த அளவில், 2,000 மெட்ரிக் டன் மாம்பழம் அங்கே உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இமாம்பசந்த், பெங்களூரா என்ற இரண்டு ரகங்கள் மாத்திரம்தான் சாறு அதிகமாக வரக்கூடிய ரகங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில், சாறு அதிகமாக வரக்கூடிய அந்த இரண்டு ரகங்கள் விளைவதில்லை; அங்கு விளையும் மாம்பழங்களில் நார்ச்சத்து மிகுந்து காணப்படுகிறது. அந்த வகை மாம்பழங்களில், மாம்பழக் கூழ் குறைவாகவே கிடைக்கும். எனவே, அங்கே மாம்பழக் கூழ் தொழிற்சாலை ஏற்படுத்துவதென்பது கடினமான ஒன்று.*

அதேபோன்று, குறைந்த திறன் கொண்ட ஒரு மாம்பழக் கூழ் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்றால் சுமார் 3 கோடி ரூபாய் வரை செலவாகும். அங்கே, தினந்தோறும் 80 மெட்ரிக் டன் முதல் 300 மெட்ரிக் டன் வரை மாம்பழம் தேவைப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகுந்த நம்பிக்கையோடு அந்தப் பகுதியில் மாம்பழக் கூழ் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அரசின் மூலமாக பல்வேறு மானியங்கள் தரப்பட இருக்கின்றன. எனவே, அவர்களுடைய கோரிக்கைகளைப் பொறுத்தவரை, எதிர்காலத்தில் அங்கே மாம்பழ உற்பத்தியை அதிகப்படுத்துகிற நேரத்தில், அந்த மானியங்களையெல்லாம் பெற்று, தொழிற்சாலையைத் துவக்குவதற்கு தொழில் முனைவோர்கள் வருவார்களேயானால், கீழ்வேளூர் பகுதியில் நிச்சயமாக மாம்பழக் கூழ் தொழிற்சாலை அமைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

2013 ஏப்ரல் 29]

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டம் விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கிற ஒரு மாவட்டம். அந்த மாவட்டத்தில் இருக்கிற என்னுடைய தொகுதியிலே ஒரு தொழிற்சாலை என்கிற முறையில், ஒரு மாம்பழக் கூழ் தொழிற்சாலையை அமைத்துத் தந்தால், ஒரு தொழிற்சாலை எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது என்கிற பெருமை எங்களுக்கு ஏற்படும். அந்தப் பெருமை உங்களுக்கும் ஏற்படும் என்பதைக் கவனத்தில்கொண்டு, பல விதிகளைத் தளர்த்தி, எப்படியாவது அந்தப் பகுதியிலே ஒரு மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கான முயற்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல, அங்கே அமைப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்வதற்கு மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 339, மாண்புமிகு உறுப்பினர் திரு சு. ரவி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

339—

சத்துணவுக் கூடம்

*18867—திரு. சு. ரவி:

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, சயனபுரம் ஊராட்சி, சயனபுரம் காலனியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குப் புதிய சத்துணவுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS